**49 திருஆலவாய்ஆனபடலம்**

சுகுணபாண்டியனுக்குப்பின்பலமன்னர்கள்பாண்டியநட்டைமிகவும் செம்மையாகஆட்சிப்புரிந்தனர். அந்த பரம்பரையில் வந்த கீர்த்தி பூடண பாண்டியன் ஆண்டு வந்த காலத்தில் ஊழிக் காலம் வந்தது. உலகமே தண்ணீரில் மூழ்கியது. இந்நிலையில் அங்கைக்கண்ணி அம்மையின் கோயிலும் பொற்றாமரைத்தீர்த்தமும் அருகில் உள்ள இடபமலை, யானைமலை, பன்றிமலை, பசுமலை, நாகமலை முதலிய மலைகள் அழியாமல் இருந்தன.

பிரளய நீர் வற்றியதும் வழக்கம் போல் சிவபெருமான் உலகத்தை மீண்டும் படைத்தார். சந்திர, சூரிய, அக்னி ஆகிய குலத்தில இருந்து தமிழ் மன்னர்கள் மூவரையும் படைத்தார்.

சந்திரமரபில் வங்கியசேகபாண்டியன் என்னும்அரசன்தோன்றினான். சோமசுந்தர்ருடைய கோயிலைச் சுற்றி நகர் அமைத்து ஆண்டு வந்தான். மக்கள் தொகைப் பெருக எம்பெருமானிடம் தனக்கு பிரளயகாலத்திற்கு முன்புள்ள நாட்டின் எல்லை தெரியாததால் எல்லா மக்களும் நன்கு வாழநாட்டின் எல்லையைக் காட்டி அருளுமாறு வேண்டினான்.

ஐயன் பாண்டியன் முன் சித்தராகத் தோன்றி தமது திருக்கரத்தில் கங் கணமான பாம்பிடம்பாண்டியனுக்கு நாட்டின் எல்லையை அளந்துக் காட்டுமாறு பணித்தார். உடனே அந்த பாம்பானது, ஐயனிடம் தன்னு டைய பெயர் விளங்கும் படி இந்நகரம் அமைய வரம் பெற்று, நகருக்கு வலமாக உடலை வளைத்து வாலை வாயில் கெளவி, நகரின் எல்லை யைக் காட்டியது. பின்னர் சித்தர் கையிலேயே சுற்றிக் கொண்டது. பாம்பு காட்டிய வழியில் சக்கரவானகிரி என்றமதில் எடுத்தான் பாண்டியன்.

தெற்கே திருப்பரங்குன்றமும், வடக்கே இடபமலையும், கிழக்கே திருபு வணமும், மேற்கேதிருவேங்கடமும் எல்லையாக அமைத்தான். ஆலவாய்என்னும்கொடியநஞ்சுடையபாம்புதன்வாயாலும்வாலாலும் எல்லை அமைத்ததால் அந்நகருக்கு ஆலவாய் என்றும் பெயர் பெற்றது. அப்பெரிய மதில் ஆலவாய் மதில் என்று பெயர் பெற்றது. இந்நகரை வங்கியசேகரபாண்டியன் சீரும்சிறப்புமாகஆண்டுவந்தான்.

**பல்லவி**

பிரளயத்திற்குப் பின் வங்கிய சேகரபாண்டியன்
உன் திருக்கோயில் நகர் அமைத்து ஆண்டான்

**அனுபல்லவி**

பிரஜைகள் பெருகிடவே இடமின்றி தவித்துன்னை
பிரளயத்திற்கு முன் உள்ள நாட்டின் எல்லைக் காட்டச் சொன்னான்

**சரணம்**

ந்நஒஊ.வந்து தன்கையில் சுத்திய பாம்பை
எல்லையைக் காட்டச் சொல்லி ஏவினவுடனே
பொத்தெனை வீழ்ந்த அந்த பாம்பெல்லைக் காட்டவும்
பாண்டியன் ஆல்வாய் என்ற சுவர் எழுப்பி விட்டான்